பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 07 புதன்கிழமை 20.05.2020 கதிர் 64



“அத்தனை பேரும் உத்தமர்தானா?”

கம்பவாரிதி ஜெயராஜ் எழுதிய அரசியல் கட்டுரை நாளைய காலை இதழில்....

# அரசியல் கைதிகள் விடுதலை: தீவிரமாக ஆராய்கிறது அரசு



## அரச தரப்பு முன்னாள் எம்.பி. தகவல்

கொழும்பு, மே 20

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலும் அமுனுகம தெரிவித்திருக்கின்றார். 2

## மற்றுமொரு யாழ். வாசி கொரோனாவால் மரணம்



லண்டன், மே. 21

பிரிட்டனில் கொரோனா தொற்றினால் மேலுமொரு யாழ்ப்பாணத் தமிழர் உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சதீஸ்குமார் என்பவரே உயிரிழந்துள்ளார். 2

## இலங்கையில் உள்ள இந்தியர்களுக்கு மீட்சி

### ஜூன் 1 இல் விசேட கப்பல் சேவை

கொழும்பு, மே. 21

கொரோனா ஊரடங்கால் இலங்கையில் சிக்கியுள்ள இந்தியர்களை அழைத்துச் செல்வதற்காகக் கொழும்பில் இருந்து தூத்துக்குடிக்கு எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி சிறப்பு கப்பல் இயக்கப்படுகிறது. இந்தக் கடற்படைக் கப்பலில் 700 பேர் தூத்துக்குடி செல்கின்றனர். 2

## ‘வேண்டாம் சுமந்திரன்’




கிளிநொச்சி, மே. 21

கிளிநொச்சி வீதியெங்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன.

இன்று அதிகாலை கிளிநொச்சியின் வீதியெங்கும் இத் துண்டுப் பிரசுரங்கள் காணப்பட்டன.

‘வேண்டாம் சுமந்திரன்’ எனும் தலைப்பில் தமிழர்களின் தியாகத்தைக் கொச்சைப்படுத்திய 2



## 584 பேர் குணமடைவு

கொழும்பு, மே. 20

கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகி தற்போது குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 584 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 15 பேர் குணமடைந்த நிலையிலேயே இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்தோடு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட 1027 பேரில் 434 பேர் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூர் விமான சேவைகளை விரிவுபடுத்துவதற்குத் திட்டம்

கொழும்பு, மே. 20

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு மேலதிகமாக மத்தள, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் இரத்மலானை விமான நிலையங்களில் பயணிகள் சேவைகளை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விமானசேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் கொரோனா வைரஸ் நாட்டுக்குள் பரவுவதைத் தடுக்க பல மாற்று நடவடிக்கைகளில் 2

## உயர் அழுத்த மின் தாக்கி இன்று ஒருவர் படுகாயம்

### உப்புமடம் சந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மே 20

யாழ்ப்பாணம் - காங்சேன்துறை வீதி உப்புமடத்தடிப் பகுதியில் உயர் அழுத்த மின் தாக்கியதில் உடலில் எரிகாயம் ஏற்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம் பெற்றது.

சிறிலங்கா ரெலிக்கொம்மின் பகுதியளவான நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் சீரா நிறுவனத்தினர் வீதியோரமாகக் கம்பங்களை நடும் 2




## யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பஸ்

### நாளை காலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு இடையேயான பஸ் சேவை நாளை முதல் மீளவும் ஆரம்பிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் - கோண்டாவில் சாலையின் இரண்டு பஸ்கள் காலை 6.30 மற்றும் 2

# தனியார் பஸ் சேவை

வடக்கு மாகாணத்துக்குள் மாவட்டங்களுக்கு இடையே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தனியார் பஸ் சேவைகள் நாளை தொடக்கம் ஆரம்பிக்கப்படும் என வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் சி.சிவபரன் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களாக கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக போக்குவரத்துச் சேவைகள் யாவும் தடைப்பட்டிருந்த பின்னர் நாளைய ஹதினம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தனியார் பேருந்து சேவையினை மாகாணத்துக்கு உட்பட்டு நடாத்த உள்ளோம்.

வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் அறிவுறுத்தலுக்கு அமைய சுகாதார நடைமுறையை பின்பற்றி ஆசன இருக்கைகளிற்கு அமைவாக தனியார் பஸ் சேவைகள் யாவும் நாளைய தினத்தில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெறும்.

# பரந்தன் - பூநகரி வீதியில் உள்ள பாலத்தில் இரும்புகள் திருட்டு

கிளிநொச்சி பரந்தன் - பூநகரி வீதியில் 14 ஆவது கிலோ மீற்றரில் அமைந்துள்ள குடமுருட்டி பாலத்தின் இரும்புகள் விசமிகளால் திருடப்பட்டுள்ளமையால் பாலத்தின் ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது எனக் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் பிகே. இளங்கீரன். தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போது குடமுருட்டிப் பாலத்தின் பாகங்கள் திருடப்பட்டுள்ளன. ( இந்தப் பாகங்களைச் சாதாரண மக்களால் அதன் ஆணிகள், நட்டுக்கள் என்பவற்றைக் கழற்றி திருட முடியாது) இதனால் தற்போது பாலம் போக்குவரத்துக்கு ஆபத்தானதாக மாறியுள்ளது.

பாலத்தில் இரும்புக்காக திருடப்பட்டுள்ள பாகங்களின் பெறுமதி ஒரு கோடி ரூபா முதல் ஒன்றறைக் கோடி ரூபா வரை ஆகும். ஆனால் அதனை இரும்புக்காக விற்றால் ஒரு இலட்சம் வரையே விற்பனை செய்ய முடியும் எனத் தெரிவித்த கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் பிகே. இளங்கீரன்.

மக்களின் பயன்பாட்டில் உள்ள நாளாந்தம் அதிகளவான மக்கள் மற்றும் வாகனங்களின் போக்குவரத்து மார்க்கத்தில் உள்ள பிரதான வீதி ஒன்றின் முக்கியமான பாலத்தின் பாகங்கள் இரும்புக்காகத் திருடப்பட்டமை மன்னிக்க முடியாத சம்பவம். தெய்வாதீனமாக எவ்வித விபத்துக்களும் இடம்பெறவில்லை.

தற்போது குடமுருட்டி பாலம் ஊடான கனரக வாகனங்கள் போக்குவரத்தைத் தவிர்க்குமாறும், பஸ்களின் பயணிகள் ஏற்றிச்செல்லப்படும்போது பாலத்தின் ஒரு புறத்தில் பயணிகளை இறக்கி மறுபுறத்தில் ஏற்றிச் செல்லுமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வேண்டுகொள் விடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொளிஸாருக்கு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதோடு,



கிளிநொச்சி கனகபுரம் வீதியில், கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்துக்கு முன்பாக உள்ள இரும்புத் தொழிலகம் ஒன்றில் பாலத்தின் பாகங்கள் அறுக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்தோடு பாலத்தின் மற்றொரு தொகுதி பாகங்கள் கிளிநொச்சி ஏ9 வீதியில் 155 ஆம் கட்டைப் பகுதியிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

பிரித்தானியாவிருந்து இறக்குமதி செய்யப்பட்டு பொருத்தப்பட்ட பாலமே இது. எனவே இந்த பாலத்தின் திருடப்பட்ட பாகங்கள் தொடர்பில் தகவல்களை கொழும்புக்கு அறிவித்துள்ளதாகவும், அங்கு பாலத்தின் பாகங்கள் இருப்பின் மீண்டும் பெற்று பொருத்த முடியும் தவறின் அந்த வீதியின் ஊடான போக்குவரத்து தடைப்படும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் பிகே.இளங்கீரன் தெரிவித்துள்ளார்.

## உள்ளூர் விமான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு கவனம் செலுத்தி வருகின்றது என்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும், ஒரு கோடி முதல் ஒரு கோடி 20 இலட்சம் பயண நடவடிக்கைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடைபெறுகின்றன, இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை ஒரு கோடி 80 இலட்சம் முதல் 2 கோடி ரூபா வரை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவல் காரணமாக உலகம் முழுவதும் விமான சேவைகள் தடைப்பட்டுள்ளன. இதனால் உலகில் உள்ள அனைத்து விமான நிலைய சேவைகளும் சரிவடைந்துள்ளன என்றும் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

## உயர் அழுத்த மின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இதன்படி இன்று காலை காங்கேசன்துறை வீதி உப்புமடத்தடியில் வீதியோரமாகக் கம்பத்தை நடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கம்பம் நடுவதற்கான குழி தேண்டப்பட்ட நிலையில் பாரம் தூக்கும் இயந்திரம் (கிரேன்) ஊடாக கம்பத்தை நடுவதற்கு முற்பட்டுள்ளனர்.

இதன்போது அங்கிருந்த உயர் அழுத்த மின் கடத்தப்படும் கம்பியில் கம்பம் தொடுகையுற்றதால் பாரம்தூக்கும் இயந்திரத்துக்கு மின் கடத்தப்பட்டுள்ளது.

இதனால் பாரம்தூக்கும் இயந்திரத்தை இயக்கியவரை மின்சாரம் தாக்கியுள்ளது. உடல் முழுவதும் எரிந்த நிலையில் தூக்கி வீசப்பட்ட அவர், அங்கிருந்து மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

கம்பம் நாட்டும் பணிகள் உரிய முறையில் மின்சார சபைக்கு அறிவிக்காமல் மேற்கொள்ப்பட்டதாலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளதாக மின்சார சபையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## யாழ்ப்பாணத்திலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 7.30 ஆகிய நேர அட்டவணையில் நாளை முதல் சேவையை ஆரம்பிக்க உள்ளது.

இதேவேளை, திருகோணமலை - யாழ்ப்பாணம் இடையேயான பஸ் சேவையை திருகோணமலை சாலையினால் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மாகாணங்களுக்கு இடையேயான பஸ் சேவைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 'வேண்டாம் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரனை தோற்கடிப்போம் என எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்களே வீதிகளில் வீசப்பட்டுள்ளன.

துண்டுப் பிரசுரத்தின் கீழே தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் கிளிநொச்சி மக்கள் என உரிமைக் கோரப்பட்டுள்ளது.

## மற்றுமொரு யாழ். வாசி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே இவரது மனைவியும் கொரோனா தாக்கத்திற்குள்ளாகி அவர் அதில் இருந்து மீண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் கைதிகள் விடுதலை; .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு எந்தவொரு வழக்குகளும் பதிவு செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக விரைவில் ஒரு முடிவை அரசு எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து இன்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட டிலும் அமுனுகம, நீண்டகாலமாகச் சிறையில் இருக்கும் கைதிகள் குறித்து ஜனாதிபதியினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன.

முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டு 11 ஆண்டுகள் கடந்துவிட்டன. சில போராளிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை. சிலருக்கு எதிராக எந்த குற்றச்சாட்டுக்கள் இல்லை.

இந்நிலையில் நீண்ட காலமாகச் சிறையில் உள்ள கைதிகளின் நடத்தை குறித்து ஆராய ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் போராளிகள் மட்டுமல்லாமல் மற்ற கைதிகள் விடுதலை தொடர்பாகவும் பரிசீலிக்கப்படுகின்றது.

அத்தோடு எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி முன்னாள் போராளிகளை சிறையில் வைத்திருப்பது பயனற்றது என்று அரசு நம்புகிறது - என்றார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

## இலங்கையியில் உள்ள இந்தியர்களுக்கு ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பல்வேறு நாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்கள், மத்திய அரசின் 'வந்தே பாரத்' திட்டத்தின் மூலம் சிறப்பு விமானங்கள் மற்றும் கப்பல்கள் மூலம் அழைத்து வரப்படுகின்றனர்.

அவ்வாறு இலங்கையில் சிக்கியுள்ள இந்தியர்களையும் வந்தே பாரத் திட்டத்தின் கீழ் அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சுற்றுலா, தொழில், கல்வி உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இலங்கை சென்று, ஊரடங்கால் சிக்கியுள்ள 1200 பேர் இந்தியாவுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்து, மத்திய அரசு அறிவித்த இணையத்தளத்தில் பதிவு செய்தனர்.

அவர்களைத் தாயகம் அழைத்து வர இம்மாத இறுதியில் கொழும்பில் இருந்து மும்பை மற்றும் பெங்களூருக்குச் இரண்டு சிறப்பு விமானங்கள் இயக்கப்படுகின்றன.

மேலும், கொழும்பு - தூத்துக்குடி இடையே எதிர்வரும் ஜூன் 1ஆம் திகதி சிறப்பு கப்பல் இயக்கப்படுகின்றது. இந்திய கடற்படைக்குச் சொந்தமான 'ஐ.என்.எஸ். ஜலஸ்வா' என்ற கப்பலில் 700 பேர் அழைத்து வரப்படுகின்றனர். இதற்கான ஏற்பாடுகளை இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மேற்கொண்டு வருகின்றது.

ஐ.என்.எஸ். ஜலஸ்வா மாலைதீவில் சிக்கிய 658 இந்தியர்களை அழைத்துக் கொண்டு கொச்சி துறைமுகம் சென்றுள்ளது. தற்போது கொச்சியில் இருக்கும் இக்கப்பல் கொழும்பு சென்று அங்கிருந்து இந்தியர்களை ஏற்றி வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இந்தக் கப்பல் ஜூன் 2ஆம் திகதி தூத்துக்குடி வஉசி துறைமுகம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் வரும் 700 பேருக்கும் குடியுரிமை உள்ளிட்ட பரிசோதனைகளைச் செய்ய துறைமுகத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தூத்துக்குடி - கொழும்பு இடையே ஏற்கனவே பயணிகள் கப்பல் இயக்கப்பட்டபோது, தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் செயல்பட்ட பயணிகள் முனையத்தில் குடியுரிமை சோதனை உள்ளிட்ட வசதிகள் செய்யப்படுவதாக துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கப்பலில் வருவோர் உடனடியாக சிறப்பு பஸ்கள் மூலம் அந்தந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அந்தந்த மாநிலங்களில் தான் அவர்களுக்கு கொரோனா பரிசோதனை, தனிமைப்படுத்துதல் போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது. இந்தக் கப்பலில் தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட தென்மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தான் அதிகம் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, தென்மாவட்டங்களில் அதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து வருகின்றனர்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## என்ன செய்யப் போகின்றது சர்வதேச சமூகம்?

**நேற்றுக் கொழும்பில் பத்தரமுல்லையில் உள்ள நாடாளுமன்றக் கட்டத் தொகுதிக்கு அருகில் உள்ள படைவீரர்கள் நினைவுத் தூபி வளாகத்தில் நடைபெற்ற தேசிய படை வீரர் நினைவு தினமான போர் வெற்றி விழாவில் சர்வதேசத்திற்கும் ஒரு தெளிவான – திட்டவட்டமான – வெளிப்படையான செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**தான் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்று ஆறு மாதங்கள் பூர்த்தியாகும் சமயத்தில் இந்த அறிவிப்பை அவர் விடுத்திருக்கின்றார்.**

**இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பில் ஒரு முக்கிய நகர்வாக – நிலைமாறு விடயமாக – கொள்ளை மாற்றமாக – இந்த அறிவிப்பைக் கருத முடியும்.**

**இந்த முடிவை அறிவித்த இடம், காலம் என்பன மிக முக்கியமானவை.**

***“நாட்டுக்காகப் பெரும் அர்ப்பணிப்புகளைச் செய்த படையினர் தேவையற்ற அழுத்தத்துக்கு உள்ளாக நான் ஒரு போதும் இடமளிக்க மாட்டேன். அதேவேளை, எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதேனும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது சர்வதேச அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக் கொள்ள நான் ஒரு போதும் பின் நிற்கப் போவதில்லை”*** **என்று அறிவித்திருக்கின்றார் அவர்.**

**இந்த அறிவிப்பை இராணுவத்தின் யுத்த வெற்றி தொடர்பான நிகழ்ச்சிக் கொண்டாட்டத்தில் வைத்து அவர் வெளியிட்டிருக்கின்றமை அர்த்தங்கள் நிறைந்ததாகும்.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் ஆகியவை தொடர்பில் பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்தப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட்டு, நீதி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே இலங்கை தொடர்பான சர்வதேச அழுத்தமாக இருந்து வருகின்றது.**

**ஜெனீவாவில் ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸில் மூலம் இலங்கைக்கு இது விடயத்தில் உரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.**

**இந்த அழுத்தத்துக்கு முகங்கொடுக்க முடியாத முன்னைய இலங்கை அரசுகள், கவுன்ஸிலின் ஏனைய நாடுகளுடன் இணங்கிப்போய், இலங்கை தொடர்பாக அந் நாடுகள் கொண்டு வந்த பிரேரணைக்குத் தானும் இணை அனுசரணை வழங்கி, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுடன் முட்டுப்படாமலும், அதே நேரம் கவுன்ஸிலின் வழி காட்டுதல்களுக்குக் கட்டுப்படுவது மாதிரியும் காட்டிக் கொண்டும் காலத்தை இழுத்தடித்தன.**

**இப்படி நான்கு வருடத்தை இழுத்தடித்து நிலைமையைச் சமாளித்த கொழும்புக்கு இந்த ஆண்டு இறுதியிலே நிலைமை கழுத்துக்கு வரும் என்றாகியுள்ளது.**

**இந்தச் சூழலில்தான் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாகத் தானும் சேர்ந்து கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்துக்குத் தான் வழங்கிய அனுசரணைப் பணியிலிருந்து ஒரு தலைப்பட்சமாகத் தான் விலகுவதாகக் கடந்த பெப்ரவரி – மார்ச் அமர்வுகளில் இலங்கை பகிரங்கமாக அறிவித்து விலகியது.**

**இப்போது அதன் தொடர் நடவடிக்கை எவ்வாறு அமையும் என்பதை யுத்த வெற்றி தொடர்பான நிகழ்வில் வைத்து நாட்டின் புதிய அரசுத் தலைவர் சூசகமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.**

**சர்வதேச விசாரணைப் பொறிமுறை, பொறுப்புக் கூறல், யுத்தக் குற்ற விசாரணை என்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் நெருக்கடி தருமானால் கவுன்ஸிலில் அதை விட்டு – கவுன்ஸிலின் உறுப்புரிமையைக் கூடத் தூக்கி எறிந்து விட்டு – இலங்கை வெளியேறும் என்பதை சூசகமாக – அதே நேரம் தெட்டத் தெளிவாக – கோடி காட்டியிருக்கின்றார் நாட்டின் ஜனாதிபதி.**

**இறுதியுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் பரிகார நீதி இல்லாவிட்டாலும் நிலைமாறு கால நீதியையாவது இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தருவோம் என்று கூறி வந்த சர்வதேச சமூகத்தின் முகத்தில் அறைவது போன்ற பதிலை நேற்று யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வில் வைத்து அறிவித்திருக்கின்றார் இலங்கை அரசுத் தலைவர்.**

**என்ன செய்யப் போகின்றது சர்வதேசம்? இலங்கை ஜனாதிபதிக்கு அதன் பதில் என்ன?**

# நாடாளுமன்றம் கூட்டப்படாமல் காலம் தாழ்த்துவது சிறந்ததல்ல

## மைத்திரிபால சிறிசேன சொல்கிறார்



கொழும்பு, மே 21

நாடாளுமன்றம் கூட்டப்படாமல் நாளுக்கு நாள் காலம் தாழ்த்தப்படுவதானது நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சிறந்ததல்ல என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாட்டில் காணப்படும் பொருளாதாரம், அரசியல் மற்றும் சுகாதார நிலைவரம் என்பன தொடர்பில் மத்திய குழுக் கூட்டத்தில் கவனம் செலுத்த வேண்டியது எமது பொறுப்பாகும்.

அத்தோடு அரசைப் பலப்படுத்துவதற்காகவும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தல் என்பவை தொடர்பில் எமக்குள்ள பொறுப்பு மற்றும் பணிகள் பற்றியும் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது.

பிரதானமாக நாட்டில் தற்போது வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசாங்கம், விசேட சுகாதார நிபுணர்கள் தலைமையிலான சுகாதாரத்துறையினர், முப்படையினர், பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகள் வழங்கும் ஒத்துழைப்பு பிரதானமானதாகும்.

நாம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்ற ரீதியில் அரசாங்கத்திற்கும் ஏனைய அனைத்து துறையினருக்கும் தனிப்பட்ட ரீதியில் கௌரவத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். நாட்டில் சீரற்ற காலநிலை ஏற்பட்டுள்ளதால் அனைத்து துறைகளும் தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எனினும் காலநிலை வழமைக்கு திரும்பியதன் பின்னர் அரசாங்கத்தால் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு நாட்டுக்குத் தேவையான உள்நாட்டு உணவு உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கட்சி என்ற ரீதியில் நாம் சுயாதீனமாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதல்களால் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டன.

எனினும் அதனை விட பாரதூரமான வகையில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கையும் சர்வதேசமும் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளன.

தற்போது உலக பொருளாதாரம் திடமான நிலையில் இல்லை என்று பொருளாதார வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். எனவே சர்வதேசத்தின் உதவியுடன் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு சுதந்திரக்கட்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு உதவ தயாராக உள்ளது.

தற்போது பிரதானமாக நாடாளுமன்றம் மற்றும் பொருளாதாரம் பற்றி பரவலாகப் பேசப்படுகிறது. எங்களின் தனிப்பட்ட நிலைப்பாடானது தேர்தல் பற்றிய பிரச்சினையை விடவும் நாடாளுமன்றத்தின் பொறுப்பு மற்றும் அரசமைப்பிற்கமைய நாட்டை ஆட்சி செய்தல் என்பவற்றிக்காக நாடாளுமன்றத்தின் கடமைகள் என்பவற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றம் இன்றி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதாரம், அரசியல் மற்றும் வெவ்வேறு பிரச்சினைகளுக்கு ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

தற்போது கொரோனா நிலைமையைக் கருத்திற் கொண்டு சுகாதார விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் பொதுத் தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவது அவசியமாகும்.

நாடாளுமன்றம் கூட்டப்படாமல் நாளுக்கு நாள் காலம் தாழ்த்தப்படுவதானது நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சிறந்ததல்ல. தேர்தல் காலம் தாழ்;த்தப்படும் போது நாட்டில் காணப்படும் அனைத்து பிரச்சினைகளும் நெருக்கடிகளும் மேலும் அதிகரிக்கும். எனவே தேர்தல் நடத்தப்படுவது மிகவும் அவசியமானதாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியானது ‘ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன’ என்ற கூட்டணியாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய தேர்தலில் ஜனாதிபதிக்கு பாரிய வெற்றியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

அதே போன்று நாடாளுமன்றத் தேர்தலின் போது ஒன்றாக போட்டியிட்டு பெரும்பான்மையைப் பெறுவோம் என்பது எமது எதிர்பார்ப்பாகும். சுமார் 5 வருடங்கள் ஜனாதிபதியாக பதவி வகித்த போது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நான் செயற்பட்டது நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்புடன் அல்ல. அதற்குள் அரசாங்கம் மற்றும் நாட்டினுள் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டன. இவ்வாறு கடந்த காலத்தில் ஏற்பட்ட குழப்பமான நிலைமைகள் நினைவில் உள்ளன.

எனவே அரசியல் ஸ்திரத்தன்மைக்குள் தற்போதைய ஜனாதிபதி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது அத்தியாவசியமானதாகும். இன்று எமது தேசிய வீரர்கள் தினமாகும். தமது அர்ப்பணிப்பினால் இது போன்றதொரு தினத்தில் யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்த வீரர்கள் அனைவரையும் இந்த சந்தர்ப்பத்தில் நாம் நினைவு கூறுகின்றோம்.

அதே போன்று தற்போதும் வீரர்கள் சுகாதாரத்துறையினருடன் இணைந்து பாடுபடுகின்றனர். அவர்கள் மேலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு தேவையான வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# சிசுவை மலசலகூடக் குழிக்குள் போட்ட தாய் கைது

பிறந்த சிசுவை வீட்டு மலசலகூடக் குழிக்குள் போட்டவர் எனக் கூறப்படும் தாயாரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா வீதியில் உள்ள வீட்டில் இந்தச் சம்பவம் இன்று மாலை இடம்பெற்றது.

நான்கு நாள்களுக்கு முன்னர் அந்தப் பெண்ணுக்கு சிசு பிறந்துள்ளது. சிசுவை வீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மலசல கூடத்தின் குழிக்குள் தாயார் போட்டுள்ளார்.

நான்கு நாள்கள் ஆகிய நிலையில் சிசுவின் உடல் அழுகி, அயலில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு துர்நாற்றம் ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சிசுவின் சடலத்தை மீட்டமையுடன், தாயாரைக் கைது செய்தனர். சந்தேக நபரான பெண்ணின் கணவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# கொரோனாத் தொற்று வீதம் இந்தியாவில் எகிறுகின்றது!

## ஒரு லட்சத்தை தாண்டியது எண்ணிக்கை

புதுடெல்லி,மே20

இந்தியாவில் கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை 1,06,750 ஆக உயர்ந்துள்ளது.

உலகம் முழுவதும் சுமார் 200 நாடுகளில் கோரதாண்டவம் ஆடி வரும் கொரோனா வைரஸ், இந்தியாவிலும் தனது கோர முகத்தை காட்டி வருகிறது. இந்தியாவில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு இன்றோடு 57 நாள்கள் ஆகியுள்ள போதிலும், கொரோனா பரவல் கட்டுக்குள் வந்தபாடில்லை. கொரோனா தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கிறது.

இன்று காலை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட தரவுகளின் படி, இந்தியாவில் கொரோனாப் பாதித்தவர்கள் எண்ணிக்கை 1,06,750 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3,303 ஆக உயர்ந்துள்ளது.

ஆறுதல் அளிக்கும் செய்தியாக கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்கள் எண்ணிக்கை 42,298 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு 5,611 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அதேபோல், 140 பேர் ஒரே நாளில் உயிரிழந்துள்ளனர்.




மராட்டியத்தில் 37,136 பேரும், தமிழகத்தில் 12,448 பேரும், குஜராத்தில் 12,140 பேரும் , டெல்லியில் 10,554 பேரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இந்தியா – நேபாளம் இடையே வெடித்தது எல்லைச் சர்ச்சை!

காத்மாண்டு,மே20

இந்தியாவுக்கு சொந்தமான இடங்களுக்கு நேபாளம் உரிமை கோரி வருவது இருநாடுகளுக்கு இடையேயான உறவில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் உத்தராகண்ட் மாநிலத்தில் இருக்கும் பகுதிகளான லிம்பியாதுரா, காலாபானி, லிபுலேக் ஆகிய பகுதிகளை தங்கள் நாட்டின் பகுதிகளாகச் சேர்க்கப்பட்டிருக்கும் நேபாளத்தின் புதிய அரசியல் வரைபடத்திற்கு அந்த நாட்டின் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சீனக் கட்டுப்பாட்டில் இருக்கும் திபெத்தின் மானசரோவர் பகுதிக்கு நுழைவாயிலாக இருக்கும் லிபுலேக் கணவாய்க்கு செல்லும் எல்லையோர சாலை ஒன்றை இந்தியா தொடங்கிய 10 நாள்களுக்குப் பின்னர் நேபாள அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்த சாலையை இந்தியா திறந்ததற்கு நேபாள வெளியுறவுத்துறை கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. 335 சதுரக் கி.மீ., பரப்புள்ள நிலத்தை இரு நாடுகளும் உரிமை கொண்டாடி, தொடர்ந்து கருத்துகளை வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில், நேபாள பிரதமர் கே.பி. சர்மா ஒலி தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில், இந்த சர்ச்சைக்குரிய நிலங்கள் அடங்கிய, புதிய தேசிய வரைபடத்தை வெளியிட ஒப்புதல் அளிக்கப்பட்டது. அப்போது அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய நேபாள பிரதமர் ஒலி, ராஜ்ய ரீதியில் அந்தப்பகுதிகளை மீண்டும் பெறும் வரை நாங்கள் ஓயமாட்டோம். இந்தப்பிரச்சினை ஓயும் வரை மங்கிப்போகாது. இந்த விவகாரத்தில் யார் வருத்தம் அடைந்தாலும் எங்களுக்கு கவலை இல்லை. எந்த விலை கொடுத்தாவது அந்தப்பகுதிகளை மீட்போம் என்றார்.

## மேற்கு வங்கத்தை இன்று மாலை சூறையாடுகிறது அம்பன் சூறாவளி

கொல்கத்தா,மே20

அம்பன் புயல் இன்று மாலை மேற்கு வங்கத்தின் சுந்தர்பன் அருகே கரையைக் கடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கக்கடலில் உருவாகியுள்ள அம்பன் புயல் இன்று மாலை வங்கதேசம் மற்றும் மேற்கு வங்கத்திற்கு இடையே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று நாள்களுக்கு முன்னர் வங்கக்கடலில் உருவான இந்த புயல் வலுவிழந்து தற்போது கரையைக் கடக்க தயாராகி வருகிறது.

இந்நிலையில் முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கையாக மூன்று லட்சம் மக்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என வங்கதேசம் தெரிவித்துள்ளது. வங்கக்கடலின் கடுமையான புயலில் ஒன்றான அம்பன் புயல் மேற்கு வங்கத்தின் திகா மற்றும் வங்காளதேசத்தின் ஹதியாவைக் கடக்கும்போது மணிக்கு 185 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாலை 4 மணி முதல் 6 மணிக்குள் புயல் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புயல் அச்சுறுத்தலால், நாளை காலை வரை கொல்கத்தாவுக்கு சிறப்பு விமானங்கள் வருகை ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஒடிசா மற்றும் மேற்கு வங்க கடலோர பகுதிகளில், கடல் கொந்தளிப்புடன் காணப்படுகிறது. ஒடிசாவின் பரதிப் மற்றும் மேற்கு வங்காளத்தில் உள்ள 24 பர்கனாஸ் மாவட்டத்தில் காலை முதல் மிக கனமழை கொட்டி வருகிறது. மேற்கு வங்காளத்தில் உள்ள 7 மாவட்டங்களில் புயல் பாதிப்பு மிகக் கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒடிசாவின் பரதிப் நகரில் இருந்து 110 கிலோ மீற்றர் தொலைவில் காலை 8 மணியளவில் மையம் கொண்டிருந்த அம்பன் புயல், மணிக்கு 18 முதல் 19 கி.மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகிறது. இதனால், மணிக்கு 102 கி.மீட்டர் வேகத்தில் தற்போது சூறைக்காற்று வீசி வருகிறது. இன்று மாலை வெளை மிகவும் முக்கியமானது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.



## பிரதமர் மோடி தலைமையில் இன்று அமைச்சரவைம் கூட்டம்

பிரதமர் மோடி தலைமையில் இன்று காலை நடைபெற்ற இந்திய அமைச்சரவைக் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் வேளாண் துறைக்கு நிவாரண உதவிகள் வழங்க வகை செய்யும் அவசரச் சட்டங்கள், கொரோனா நிலைவரம், அம்பன் புயல் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.



முற்பகல் 11 மணி வாக்கில் தொடங்கிய மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், கொராணாவால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் முடிவுக்கு ஒப்புதல் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையாக 4 ஆம் முறையாக நீடிக்கப்பட்டுள்ள ஊரடங்கு, கொரோனா தொற்று பரவல் நிலைமை உள்ளிட்டவை குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட இருந்தது.

இன்று கரையைக் கடக்கும் அம்பன் புயலால், ஒடிசா மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் ஏற்பட வாய்ப்புள்ள சேதங்கள் குறித்தும், அவற்றை கட்டுப்படுத்துவதில் தேசிய பேரிடர் மேலாண்மை குழுக்களின் பங்கு குறித்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அம்பன் நிலவரம் குறித்து உள்துறை அமைச்சர் அமித் ஷா, உள்துறை செயலர் அஜய் பல்லா மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்திய பிரதமர் மோடி, புயலால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என ஏற்கனவே ட்விட்டரில் உறுதி அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

*பிந்திய செய்தி*

## அதி தீவிர புயலாகக் கரையை கடக்க தொடங்கியது அம்பன்



மேற்கு வங்கம் மற்றும் வங்க தேசம் இடையே அம்பன் புயல் கரையை கடக்க துவங்கியுள்ளது.

வங்கக்கடலில் உருவான அம்பன் புயல் தற்போது மேற்கு வங்க மாநிலம் திகா மற்றும் வங்கதேசத்தின் ஹதியா தீவை ஒட்டிய சுந்தரவனக்காடுகளுக்கு இடையே அதி தீவிர புயலாக கரையை கடக்க துவங்கியுள்ளது.

மணிக்கு 22 கிலோ மீற்றர் வேகத்தில் புயல் நகர்ந்து வரும் நிலையில், மணிக்கு 155 முதல் 165 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசி வருகிறது. இதனால் கனமழையும் பெய்து வருகிறது.

கரையைக் கடக்க தொடங்கியுள்ள அம்பன் புயலின் கண்பகுதி இன்று மாலையில் முழுவதுமாக கரைப்பகுதியை அடைந்தது எனக் கூறப்பட்டது.

அதன்பின்னர் 3 மணிநேரத்தில் புயல் முழுவதுமாக கரையைக் கடக்கும் என்றும், பின்னர் படிப்படியாக வலுவிழக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்க மலேரியா வில்லை எடுக்கிறாராம் டிரம்ப்!

வொஷிங்டன்,மே20

கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாமல் தடுப்பதற்காக மலேரியா மருந்தான ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரைகளை சாப்பிட்டு வருகிறேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறியிருக்கின்றார்.

உலகமெங்கும்பரவிவருகிறகொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த நிலையில் இந்தியாவில் மலேரியா காய்ச்சல் நிவாரணத்துக்காக வழங்கப்படக்கூடிய ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரைகள், கொரோனா வைரஸ்களை கொல்கின்றன என முதலில் தகவல்கள் வெளிவந்தன.

இதை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் நம்புகிறார்.

இதற்காக அவர் பிரதமர் மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமெரிக்காவுக்கு இந்த மாத்திரைகளை பெருமளவில் அனுப்பி வைக்கும்படி கேட்டார். அந்த மாத்திரைகள் மீதான ஏற்றுமதி தடையை இந்தியாவும் விலக்கிக் கொண்டு பல கோடி மாத்திரைகளை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது.

ஆனால் இந்த மாத்திரை கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு வேலை செய்வதில்லை, இந்த மாத்திரைகளை கொடுத்து கொரோனா வைரஸ் நோயாளிகள் உடல் நிலையில் முன்னேற்றம் இல்லை, இந்த மாத்திரைகளை கொடுத்தும் பலர் உயிரிழந்துள்ளனர் என ஆய்வு தகவல்கள் வெளிவந்தன.

ஆனால் அவற்றை ஜனாதிபதி டிரம்ப் ஏற்கவில்லை.

ஹைட்ராக்சிகுளோரோகுயின் மாத்திரைகள், கொரோனா வைரஸ்களை தடுப்பதற்கு பயனுள்ளவையாக இருக்கும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று அமெரிக்க மருத்துவ சங்கத்தின் தலைவர் டாக்டர் பேட்ரிஸ் ஹாரிஸ் தெரிவித்துள்ளார். பெரிய அளவில் 2 ஆய்வுகளும் நடத்தப்பட்டன.



நியூயோர்க்கில் 1,400 நோயாளிகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரைகளால் எந்த நன்மையும் கிடைக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இதே போன்று பிரான்ஸ் ஆராய்ச்சியாளர்களால் 84 நோயாளிகளுக்கு இந்த மருந்து தந்து சோதிக்கப்பட்டது. அது மட்டுமின்றி மேலும் 97 பேருக்கு இந்த மாத்திரைகள் தந்து சோதிக்கப்பட்டது. வழக்கமான பராமரிப்பும் மேற்கொள்ளப்பட்டது. இதிலும் இந்த மாத்திரைகளால் பெரிய அளவில் பலன் இல்லை என தெரிய வந்தது.

சீனாவிலும் 150 பேருக்கு இந்த மாத்திரைகள் கொடுத்து சோதனை நடத்தப்பட்டது. அதில் கொரோனா வைரஸ், இந்த மாத்திரைகளால் சாகின்றன என்பதற்கான அறிகுறிகள் இல்லை. மாறாக பக்க விளைவுகள்தான் ஏற்பட்டன என தெரிய வந்துள்ளது.

வெள்ளை மாளிகையில் அதிகாரிகள் சிலருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து ஜனாதிபதி டிரம்புக்கு தினசரி கொரோனா வைரஸ் பரிசோதனை நடத்தப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியவை வருமாறு:-

நான் ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரைகளை ஒன்றரை வார காலமாக தினமும் எடுத்து வருகிறேன். இத்துடன் துத்தநாக சப்ளிமென்டும் எடுத்துக்கொள்கிறேன்.

என்னை இந்த மருந்துகள் எடுத்துக்கொள்ளுமாறு டாக்டர்கள் பரிந்துரை செய்யவில்லை. ஆனால் இந்த மாத்திரைகளை வழங்குமாறு வெள்ளை மாளிகை டாக்டரை நான் கேட்டுக்கொண்டேன். அதை எடுத்துக்கொள்ளவும் செய்கிறேன். இது நல்லது என்று கருதித்தான் சாப்பிடுகிறேன். இந்த மாத்திரை பற்றி பல நல்ல தகவல்களை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

நான் இந்த மாத்திரைகளை எடுத்துக் கொண்டு நன்றாகத்தான் இருக்கிறேன் என்று அவர் கூறினார்.

ஆனால் இந்த மாத்திரைகளை கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுக்கு கொடுத்தால் மரணம் உள்ளிட்ட மோசமான பக்க விளைவுகள் ஏற்படும் என்று அமெரிக்க உணவு, மருந்து நிர்வாகம் (எவ்.டி.ஏ) எச்சரித்து இருக்கிறது. அதையும் உதாசீனப்படுத்திவிட்டு டிரம்ப் இந்த மாத்திரைகளை எடுத்துக்கொள் இன்றம குறிப்பிடத்தக்கது

## கொரோனாவில் இருந்து 4 நாள்களில் குணப்படுத்தும் மருந்து கண்டுபிடிப்பாம்!

டாக்கா,மே20

கொரோனாவில் இருந்து 4 நாள்களில் குணப்படுத்தும் இரட்டை மருந்துக் கலவையை கண்டறிந்துள்ளதாக வங்கதேச டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று உலகம் முழுவதும் கோரத்தாண்டவம் ஆடி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் உலக நாடுகள் பரிதவித்து வருகின்றன.உலகம் முழுவதும் விஞ்ஞானிகள் கொரோனா தடுப்பு மருந்தைக் கண்டறிய கடந்த 6 மாதமாக சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருப்பினும் இன்றளவும் அதிகாரபூர்வமாக எந்த நாடும் தடுப்பு மருந்தினை கண்டறியவில்லை. சில நாடுகள் விலங்குகளிடம் சோதனை செய்யப்பட்டு வெற்றிப் பெற்றன எனவும், மனிதர்களுக்கு சோதனை நடக்க இருக்கின்றன எனவும் கூறி வருகின்றன.

இந்நிலையில், வங்கதேச மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை சேர்ந்த தரெக் ஆலம் என்ற டாக்டரின் குழு, கொரோனாவை கட்டுப்படுத்தும் மருந்துக் கலவையை கண்டறிந்துள்ளது.

இந்தக் குழுவினர் கொரோனா குறித்து ஆய்வு செய்து வந்தனர். அதற்கான தடுப்பு மருந்தினை உருவாக்க தீவிர சோதனையில் ஈடுபட்டு மெக்டின் மற்றும் டாக்ஸிசைக்ளின் ஆகிய மருந்துகளைக் கலந்து அளித்தும் சோதித்துள்ளனர்.

60 பேரிடம் நடத்தப்பட்ட இந்த சோதனையின் முடிவில் 4 ஆம் நாளிலேயே 60 பேரும் வெற்றிகரமாக கொரோனாவில் இருந்து மீண்டுள்ளனர்.அவர்களுக்கு முதல் 3 நால்களில் சுவாசப் பிரச்சினை சீரடைந்துட, 4 ஆம் நாளில் கொரோனா பரிசோதனையில் தொற்று இல்லை என்றும் முடிவுகள் கிடைத்துள்ளன.மேலும் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த குழுவினர், சர்வதேச அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்துள்ளனர்.

## கோடையில் கொரோனா பரவாதா? அதற்கு எந்த ஆதாரமும் இல்லை!

### ஆய்வு முடிவுகளில் தகவல்

கோடை காலத்தில் கொரோனா பரவல் கட்டுக்குள் இருக்கும் என்று கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை என அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

கோடை காலத்தில் கொரோனா பரவல் மிதமாகவே இருக்கும் என பல தகவல்கள் வெளியாகின. ஆனால் பிரின்ஸ்டன் குழுவினர் நடத்திய ஆய்வில், கோடைக்கும் கொரோனா பரவலுக்கும் மிக சிறிய அளவிலான தொடர்பு மட்டுமே உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே கோடைகாலத்தில் கொரோனா பயமின்றி இருக்கலாம் என யாரும் கருத வேண்டாம் என்றும், பலனளிக்கக்கூடிய கட்டுப்பாடுகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால் வெப்பம் மிகுந்த, ஈரப்பதம் நிறைந்த காலநிலையிலும் கொரோனா தாக்குதல் அதிகம் நிகழும் எனஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த ஆய்வு முடிவுகள் மருத்துவ இதழான சயன்ஸ் – ல் வெளியிடப்பட்டுள்ளது.

## ஆளில்லா விமானம் மூலம் மருந்த, உணவு விநியோகம்




### அயர்லாந்தில் ஆரம்பம்

அயர்லாந்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று ஆளில்லாக் குட்டி விமானத்தில் மருந்துகளையும் உணவு வகைகளையும் எடுத்துச் சென்று வீடு வீடாக வழங்கும் பணியைத் தொடங்கியுள்ளது.

அயர்லாந்தில் கொரோனா பரவலைத் தடுக்க ஊரடங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. மூத்த குடிமக்கள் நோய் தொற்றாமல் தடுக்க வீட்டுக்குள்ளேயே தங்கி இருக்க வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில் மன்னா ஏரோ என்கிற நிறுவனம் மணிகால் என்னும் நகரில் மூத்த குடிமக்களுக்காக உணவு வகைகளையும், மருந்துகளையும் ஆளில்லாக் குட்டி விமானங்கள் மூலம் வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கும் பணியைத் தொடங்கியுள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் 600 நகரங்களில் இந்தச் சேவையைத் தொடங்க உள்ளதாகவும், ஒரு விமானம் ஒருநாளில் நூறு முறை 4 கிலோ எடையுள்ள பொருள்களை எடுத்துச் சென்று வழங்க முடியும் என்றும் மன்னா ஏரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் மீண்டும் உச்சத்தில் கொரோனா!

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் காரணமாக நேற்று ஒரே நாளில் ஆயிரத்து 500க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். அந்நாட்டில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 15 லட்சத்து 70 ஆயிரத்தை தாண்டியது.

அமெரிக்காவில் கடந்த 24 மணி நேரத்தில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 லட்சத்து 70 ஆயிரத்தைக் கடந்துள்ளது. அங்கு ஒரே நாளில் வைரஸ் தொற்றினால் ஆயிரத்து 500க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளமையால் பலியானோர் எண்ணிக்கை 93 ஆயிரத்து 500 ஆக உயர்ந்துள்ளது. இந்த நிலையில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பிரேசிலில் முதன்முறையாக கொரோனாவின் தாக்கத்திற்கு ஒரே நாளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இதனால் அங்கு பலியானோர் எண்ணிக்கை 18 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

ரஷ்யாவில் பாதிப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அமெரிக்காவில் இருந்து வென்டிலேட்டர்களை அனுப்பும் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

ரமழான் தினத்தன்று மக்கள் நெரிசலைக் கட்டுப்படுத்த ஈராக்கில் அன்றைய தினம் முழு பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டில் வைரஸ் தொற்றுக்கு இறப்பு விகிதாச்சாரம் 3 ஆவது நாளாக 100க்கும் குறைவாகப் பதிவாகி உள்ளது.பெருந்தொற்று காரணமாக உள்ளூர் தயாரிப்பாளர்களிடம் இருந்து நூறு கோடி முகக்கவசங்களை வாங்க பிரான்ஸ் அரசு முடிவு செய்துள்ளது.

கொரோனா தொற்று மற்றும் பாதிப்பு குறித்த தகவல்களை வெளியிடுவதில் வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொண்டதாக உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் ஜெனரல் டெட்ரோஸ் தெரிவித்துள்ளார்.



# முள்ளிவாய்க்கால் அழிவை தடுக்க வல்லமையிருந்தும் பேசாமலிருந்தவர்களே இன்று அஞ்சலிக்குப் போட்டி

## ஆனந்தசங்கரி கடும் சீற்றம்

யாழ்ப்பாணம், மே. 21

முள்ளிவாய்க்கால் படுகொலையை எமது தமிழ் அரசியல் தலைவர்கள் நினைத்திருந்தால் தடுத்து நிறுத்தி இருக்கலாம். யாருக்கெல்லாம் தடுக்கக்கூடிய வல்லமையும் வாய்ப்பும் இருந்ததோ, அவர்கள் அதைத் தடுத்து நிறுத்தாமல் வேடிக்கை பார்த்து விட்டு, அதே நபர்கள் இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அஞ்சலிக்கு அறிக்கை விடுவது வேதனையைத் தருகின்றது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

ஊடங்களுக்கு அவர் நேற்று அனுப்பியுள்ள அறிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: -

எமது விடுதலைப் போராட்டத்துக்காக தங்கள் உயிரை அர்ப்பணித்து செயற்பட்ட தலைவர்கள் மற்றும் பல்வேறு விடுதலைப் போராட்ட அமைப்புக்களின் தலைவர்கள், போராளிகள், இறுதியாக முள்ளிவாய்க்காலில் ஏதும் அறியா அப்பாவிப் பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள் மரணித்துள்ளார்கள்.

எனவே இவர்கள் அத்தனை பேருக்குமான ஒரு நிகழ்வாகவே நாம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிக்க வேண்டும். அதுவே ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் நாம் செலுத்தும் உண்மையான நன்றிக்கடனாகும்.

ஆயுதப்போராட்டம் ஆரம்பித்த காலத்தில் விடுதலை வேட்கையை நெஞ்சில் சுமந்து கொண்டு, ஆயுதத்தை தோளிலே தாங்கிக் கொண்டு விடுதலைப் போராட்டத்திற்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் களத்தில் முகம் கொடுத்தார்கள்.

இதில் பல விடுதலை அமைப்புக்கள் உக்கிரமாக போராடி பல வெற்றிகளையும் பெற்றன. கால ஓட்டத்தில் பலமாக இருந்த போராட்ட அமைப்புகள் தங்களுக்குள் முரண்பட்டுத் தங்களுக்குள்ளேயே மோதிக் கொண்டார்கள்.

எதிரி எமது தமிழ் இளைஞர்களை அழித்ததிலும் பார்க்க, முரண்பாடுள்ள இயக்கங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி அதிகளவு இளைஞர்களை கொன்று குவித்தன.

இது தான் எமது போராட்டத்தின் தோல்விக்கும், முள்ளிவாய்க்கால் அவலத்துக்கும் காரணமாக அமைந்தது. பல ஆளுமைமிக்க தலைவர்கள், புத்திஜீவிகள், பல அறிஞர்கள் என நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டார்கள்.

இந்த இரண்டு காரணங்களுமே எமது விடுதலைப் போராட்டத்தின் தோல்வியைத் தீர்மானித்தன. இதனை நன்கு ஆராய்ந்து உணர்ந்தபடியால் தான் 2004ஆம் ஆண்டிலிருந்து நான், இறுதியாக நடந்த முள்ளிவாய்க்கால் அவலம் நடந்துவிடக்கூடாது என்பதற்காக, அல்லும் பகலும் பாடுபட்டேன்.

இதற்காக எனக்குக் கிடைத்த அவமானங்களும், பட்டங்களும் ஏராளம் இருந்தும் இறுதிவரை முயற்சிகளை மேற்கொண்டேன். எஞ்சியிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பாவது விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கில், விடுதலைப் புலிகள் கடந்த கால கசப்பான, விரும்பத்தகாத முன் அனுபவங்களை பாடமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தில், அவர்களுக்கு இடித்து உரைக்கவேண்டிய தேவை, தமிழ் மக்கள் சார்பில் எனக்கு இருந்தது.

அந்த கரடுமுரடான பாதையில் நான் பயணிக்க ஆரம்பித்த பொழுது, தமிழ் மக்களின் விடுதலையைப்பற்றி கொஞ்சமும் சிந்திக்காத புலிகளை உசுப்பேத்திக் கொண்டிருந்த ஒரு சில சுயநலவாதிகள் தங்கள் பதவி சுகத்துக்காக எனக்குத் துரோகி பட்டம் வழங்கினார்கள்.

அவ்வாறு செயற்பட்டவர்கள் புலிகளும் தமிழ் மக்களும் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பொழுது, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தார்கள். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டில் நீண்ட காலம் தங்கியிருந்தும் வேடிக்கை பார்த்தார்கள்.

2009ஆம் ஆண்டு யுத்தத்தில் முதல் முறையாக கிளிநொச்சி தோல்வியடைந்தவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்களைப் பாதுகாப்பதற்கு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தேன்.

அவர்கள் அதனைக் கண்டுகொள்ளவில்லை அதே போல அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, இனிமேல் ஒரு அப்பாவி உயிரும் கொல்லப்படக் கூடாது என்றும், ஒரு நட்பு நாட்டுடன் இராணுவ உதவியைப் பெற்று, அப்பாவி மக்களைப் பாதுகாக்கும் படியும் கேட்டுக்கொண்டேன்.

அவரும் அதற்கு செவிசாய்க்கவில்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இனிமேல் யுத்தத்தை வெல்லமுடியாது, மக்களை பாதுகாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு, அதற்கு ஏற்றவாறு ஒரு முடிவை மேற்கொள்ளுமாறு எடுத்துரைத்தேன். அவரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால், அவர் ஒரு போராளி என்பதால் 'செய் அல்லது செத்துமடி' என்ற கொள்கையுடையவர். அவரிடம் அதனை எதிர்பார்க்க முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய வெளியுறவுத்துறை செயலர், கூட்டமைப்பை டெல்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார் அதனைக் கூட்டமைப்பு முட்டாள் தனமான நிபந்தனைகளை கூறி தட்டிக் கழித்தது.

இந்த சந்தர்ப்பத்திலும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் வெளிநாட்டில் தான் இருந்தார்கள். அதன் பின்னர் பிரித்தானிய நாடாளுமன்றக்குழு இலங்கைக்கு வந்த பொழுது, அவர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தியாவின் தேர்தலின் முடிவு தெரிவதற்கு முன் யுத்தக் களத்தில் மிகப்பெரிய அனர்த்தம் நடக்கப்போகின்றது என்று எடுத்துக் கூறியுள்ளார்கள்.

கூட்டமைப்புக்கு அனர்த்தம் ஒன்று நடக்கப் போகின்றது என்று தெரிந்திருந்தும், அதனை தடுக்க முயற்சிக்காமல் கபடநாடகமாடியுள்ளது.

அதன் பின்னர் அவர்கள் தங்களுடைய தொலைபேசி தொடர்புகளையும் நிறுத்திவைத்துவிட்டார்கள். எனது கோரிக்கைக்கு உதவக்கூடிய வகையில், அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வகட்சி தலைவர்களுக்கான கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த கூட்டத்தில் கூட்டமைப்பு தவிர்ந்த அனைத்துக் கட்சிகளும் பங்கேற்றன. அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி இன்னும் 80,000 மக்கள் தான் வன்னியில் இருக்கின்றார்கள் என்று கூற, நான் இன்னும் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மக்கள் இருக்கின்றார்கள், அவர்களை காப்பாற்றுமாறு கேட்டுக்கொண்ட போது, கடுமையான வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் வேண்டாவெறுப்பாக, மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மக்களுக்கும் சாப்பாடு அனுப்புகிறோம் என்று அவருக்கு தெரிந்த தமிழில் கூறி எழுந்து சென்றார்.

அதில் வேடிக்கை என்னவென்றால் அங்கு வந்திருந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் எனக்குச் சார்பாக குரல் கொடுக்க முன்வரவில்லை. அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த கூட்டத்துக்கு வந்திருந்தால் யுத்தத்தை நிறுத்தும்படி கோரிக்கை விடுத்து, பலியான அனைவரையும் பாதுகாத்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தையும் இல்லாமல் செய்து, ஆயிரக்கணக்கான மக்களின் பட்டினிச்சாவையும் தடுத்திருக்கலாம்.

அப்போது சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தமும் நடந்துகொண்டிருந்த நேரம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருதடவை நாடாளுமன்றத்தில் நான் உரையாற்றும் பொழுது, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் 'யாசிர்அரபாத்' போன்று பிரபாகரன் உலகை வலம் வரும் காலம் வெகுவிரைவில் வரும் என்றும், ஆனையிறவை மீண்டும் கைப்பற்றுவது பகல் கனவு என்றும், 10 வருடமானாலும் பளையை மீண்டும் கைப்பற்ற முடியாது என்றும், 35,000 இராணுவ வீரர்களை காப்பாற்றித் தாருங்கள் என்று உலக நாடுகளை கெஞ்சும் நிலைமை மீண்டும் வராது என்று நினைக்க வேண்டாம் என்று, பாதுகாப்பு அமைச்சரை பார்த்து நேருக்கு நேராக கேட்டவன் நான்.

இந்த சந்தர்ப்பத்தில் எனக்கருகில் இரா.சம்பந்தன் எனது பேச்சை உன்னிப்பாக கவனித்துக்கொண்டு இருந்தார். அன்றே அமைச்சர் சார்ந்த அரசு, நான் புலிகளுக்குச் சார்பானவன் என்று தீர்மானித்துக் கொண்டது என்றே நான் நினைக்கின்றேன்.

ஆனால் நான் இரண்டு தரப்பினருக்குமிடையே உள்ள சரி பிழைகளை வெளிப்படையாகவே கூறி வந்தேன்.

அதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் எனது சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனக்கு எதிராகச் செயற்படத் தொடங்கிவிட்டார்கள். இது அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு இவர்கள் அறிந்தோ அறியாமலோ துணைபோயுள்ளார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து கொண்டே என்னைப்பற்றி நான் கூறாத தவறான தகவல்களை விடுதலைப் புலிகளுக்கு அடிக்கடி கூறி வந்துள்ளார்கள். அதன் விளைவால் புலிகள் தங்களின் எதிரியாக என்னைப்பார்க்க தொடங்கி விட்டார்கள்.

அரசாங்கம் எதிர்பார்த்த நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு சரியான முறையில் காய்கள் நகர்த்தப்பட்டன. இது 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்'; என்ற வள்ளுவனின் குறளுக்கு அமைய விடுதலைப் புலிகளை சுற்றி துதிபாடும் சுயநலக்கும்பல் சூழ்ந்து கொண்டது. இந்தக் கும்பல் தான், புலிகளுக்கு அறிவுரை கூறி இடித்து உரைப்பவர்களை துரோகியாக காட்டிக்கொடுத்தது.

இந்தக் கும்பல் தான் முள்ளிவாய்கால் படுகொலையை வேடிக்கையும் பார்த்தது.

இந்தக் கும்பல் தான் புலிகளை அழித்துவிட்டேன் என்று கொக்கரித்த சரத் பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலிலும் ஆதரித்தது.

இந்தக் கும்பல் தான் தற்போது முள்ளிவாய்கால் நினைவேந்தல் நிகழ்விவுக்கு ஆதரவு தேடுகின்றது.

என்னைப் பொருத்தளவில் 2004ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த 22 பேரில் முல்லைத்தீவு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கனகரத்தினம் மற்றும் தம்பி சிவாஜிலிங்கம் தவிர்ந்த ஏனையோர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு அஞ்சலி செலுத்த அருகதையற்றவர்கள்.

அவர்களுக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு தகுதியும் தார்மீக பொறுப்பும் கிடையாது. விரும்பினால் அவர்களின் வழக்கமான பாணியில் விலகி நின்று வேடிக்கை பார்க்கலாம் இது அவர்களுக்கு கை வந்த கலை - என்றுள்ளது.

# ஹற்றனில் மண்சரிவு

கொழும்பு, மே. 20

மலைநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அடை மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செனன் தோட்டப் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதால் 6 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச் செனன் தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை அம்பகமுவ பிரதேச செயலகத்தின் ஊடாகத் தோட்ட கிராம சேவகர் வழங்கி வருகின்றார்.

மேற்படி தோட்டத்தில் ஒரு வீடு மீது மண் மேடு சரிந்து விழுந்துள்ளது. இதனையடுத்து அந்தப் பகுதியில் மண்சரிவு ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாலேயே அபாய வலயத்தில் இருந்த 6 குடும்பங்களும் வெளியேற்றப்பட்டுள்ளன.

மலைநாட்டில் இன்று காலைவேளை கன மழை பெய்யாத போதிலும், அடுத்துவரும் நாட்களில் மழை பெய்யக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளதால் தமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.



# முள்ளிவாய்க்கால் நினைவுக்கு கெடுபிடி மறுபுறத்திலோ இராணுவ வெற்றி விழா

## அரசு மீது சீறிப்பாய்கிறார் ஸ்ரீநேசன்

மட்டக்களப்பு, மே. 20

**முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை அனுஸ்டிக்க விடாமல் பாதுகாப்புக் கெடுபிடிகளை அதிகரித்து விட்டு மறுபுறம் அரசாங்கம் இராணுவ வெற்றி தினத்தை கொண்டாடி வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**



இன்று மாமாங்கத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2009 இறுதியுத்தத்தின்போது உயிரிழந்தவர்களின் பதினோராம் ஆண்டு நினைவு தினம் வடக்கு – கிழக்கிலும் ஏனைய பிரதேசங்களிலும் அனுஷ்டிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இருந்தும் இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தைத் தமிழ் மக்கள் அனுஷ்டிக்கக்கூடாது என்ற வகையில் அரசால் பல விதமான கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது.

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் செயலகத்தில் கடந்த 18 ஆம் திகதி கொரொனா அச்சத்தின் காரணமாக இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நோக்கில் மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன், சுகாதார நடைமுறையோடு கூடிய நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தோம். இருந்தும் நீதிமன்ற தடையுத்தரவை பெற்றுக் கொண்டு, அந்த நிகழ்வைச் செய்யவிடாமல் எம்மை கைது செய்து ஏற்றிச் செல்வதற்கான வாகனங்களுடன் வந்து இடையூறு விளைவித்திருந்தனர்.

அத்துடன் ஊடகவியலாளர்களுக்குக் கூட கருத்துக்களை வெளிக் கொணரும் உரிமை மறுக்கப்பட்டதுடன், மட்டக்களப்பிலும், வாகரையிலும் செய்திகளைச் சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு வேதனைக்குரிய விடயமாகும்.

கடந்த காலங்களில் இந்த முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டிக்க சுதந்திரமான சூழ்நிலையொன்று காணப்பட்டது. இருந்தும் இப்போது இருக்கின்ற ஆட்சி மாற்றம் காரணமாக தமிழ் மக்கள் இறந்தவர்களைக் கூட நினைவுகூற முடியாத வகையில் இராணுவ கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. இதற்கு தற்போது கொரொனா நோய்த் தொற்றினை காரணம் காட்டுகிறார்கள்.

இராணுவ வெற்றி தினத்தைக் கொண்டாடுவதற்கு நூற்றுக்கணக்கானவர்களை அழைத்து செல்கிறார்கள் அதிலும் கூட வைரஸ் தொற்றுக்குள்ளான படையினரும் கலந்திருப்பதாக செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. இராணுவ வெற்றி தினத்தை கொண்டாடுகின்ற போது ஏற்படாத தொற்று முள்ளிவாய்க்காலில் இறந்த தம் உறவுகளை நினைத்து அவர்களுடைய கவலைகளை சொல்லி அழுது அஞ்சலி செலுத்தும் போது மாத்திரம் தொற்றும் என எந்த ஒரு விஞ்ஞானியும் எதிர்வுகூறவில்லை. அப்படியிருக்க இந்த கொரோனா நோயானது துக்கத்தை அனுஷ்டிக்கும் போது மட்டும் தொற்றாது, வெற்றிக் கொண்டாட்டத்தின் போதும் தொற்றும் என்பதை அரசாங்கம் அறிந்துகொள்ள வேண்டும்.

நோய்த் தொற்று பொதுவானது. அது இனம் பார்த்துப் பரவக் கூடியதல்ல. இதனை முன்நிறுத்தி சந்தர்ப்பதினைப் பயன்படுத்திக் கொண்டு இந்த அரசாங்கம் தமிழ் மக்கள் மீது அடக்கு முறையைப் பிரயோகிப்பதோடு, இராணுவ அதிகாரிகளை அமைச்சுக்களின் செயலாளர்களாகவும், அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்து நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்க போன்றவர்களுக்கு பொதுமன்னிப்பும் வழங்கியுள்ளது.

எனவே அடக்குமுறைகள் ஒடுக்குமுறைகள் என்பது மீண்டும் மீண்டும் தமிழ் மக்களை ஓர் அவலத்தை நோக்கி கொண்டு செல்லும் செயற்பாடாகத்தான் இருக்கும் என்பதை இந்த இடத்தில் நான் தெளிவாக கூறிக் கொள்ள விரும்புகின்றேன் – என்றார்.

# பெண் தலைமைக் குடும்பத்துக்கு இராணுவத்தினரால் புதிய வீடு

யாழ்ப்பாணம், மே. 10

யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றிற்கு இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடு இன்று புதன்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் சமூக சேவைகளில் ஒன்றான, வீட்டுத்திட்டம் அமைத்துக் கொடுக்கும் பணியில், யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி ரூவான் வணிகசூரியவின் எண்ணக்கருவுக்கு அமைய இராணுவச் சிப்பாய்களின் நிதிப் பங்களிப்பில் இந்த வீடு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இன்று கையளிக்கப்பட்டது.

கணவன் விபத்தில் உயிழந்த நிலையில் இரண்டு பிள்ளைகளுடன் குடிசை வீட்டில் வசித்து வந்த சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/160 அராலி கிராமத்தைச் சேர்ந்த குடும்பத்தினருக்கே இந்த வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது.

அத்துடன் தனிநபர் ஒருவனால், இந்தக் குடும்பத்தினருக்கு குழாய் கிணறும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கட்டளைத்தலைமையகத்தின் நலன்புரி நிதியத்தின் நிதிப்பங்களிப்பில் சுமார் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியில் இந்த வீடு அமைக்கப்பட்டு, யாழ்.மாவட்ட கட்டளை தளபதி வணிகசூரியவினால் கையளிக்கப்பட்டது.

# அனைத்து மாணவர்களுக்கும் கல்வியை வழங்க நடவடிக்கை

கொழும்பு, மே 20

கொரோனா தொற்று காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், தொலைதூரக் கல்வி முறைமையினூடாக 60 வீதமான பாடசாலை மாணவர்களே சலுகைகளைப் பெற்றுக்கொள்வதாக கல்வி அமைச்சு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதன் அடிப்படையில், பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் காலப்பகுதியில் எவ்வித தொலைதூர கல்வி வசதிகளையும்பெறமுடியாத 40 வீதமான மாணவர்களும் ஏதேனும் ஒரு முறைமையினூடாக கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எச்.என்.சித்ராநந்த தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், பாடசாலை மட்டத்தில் அச்சிடப்பட்ட கற்றல் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய கையேடுகளை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக மாகாணக் கல்வி அதிகாரிகளுடன் பல சுற்று பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் காலப்பகுதியில் அனைத்து மாணவர்களுக்கும் பொருத்தமான கற்றல் முறைமையினூடாக கல்வியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**வீடு வாடகைக்கு தேவை**

வியாபார நிறுவனம் ஒன்றிற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் வாடகைக்கு வீடு தேவை.
தொடர்புகளுக்கு:- 071 7777 559

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஜூன் 20 தேர்தல் சாத்தியமில்லை

## உயர் நீதிமன்றுக்கு அறிவித்தது தேர்தல்கள் ஆணைக்குழு

நாடு

கொழும்பு, மே 20

**தற்போதுள்ள நிலைமையில் திட்டமிட்டபடி ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சத்தியங்கள் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.**

**ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்த திகதி குறிப்பிட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை சவாலுக்குட்படுத்தும் அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றால் இன்று மூன்றாவது நாளாகப் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன.**

பிரதம நீதியரசர் தலைமையிலான 5 நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு இந்த மனுக்களை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுத்தது.

இன்று தேர்தல்கள் ஆணைக்குழு தனது நிலைப்பாட்டை உயர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் அபாயம் நீங்கியுள்ளதாக அறிவித்த பின்னர் தேர்தலை நடத்துவதற்கான பணிகளை முன்னெடுக்க 9 தொடக்கம் 11 வாரங்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தேவைப்படும்.

ஊரடங்குச் சட்டம் மற்றும் சுகாதாரக் கட்டுப்பாடுகளால் மனிதவள வேலை நேரமும் குறைவடைகின்றது.

எனவேதான் அரசமைப்புச் சம்பந்தப்பட்ட இந்த விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றின் ஆலோசனையைப் பெறுமாறு ஜனாதிபதியின் செயலாளரிடம் தேர்தல் ஆணைக்குழு கேட்டிருந்தது. எனினும் உயர் நீதிமன்றின் ஆலோசனையைப் பெற ஜனாதிபதி விரும்பவில்லை என்று ஜனாதிபதியின் செயலாளரால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பதிலளிக்கப்பட்டது.

அரசால் அறிவிக்கப்பட்டபடி ஏப்ரல் 27ஆம் திகதிக்குள் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு நீக்கப்படும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்தத் திகதி நிர்ணயிக்கப்பட்டது. இன்று அது மே 20 ஆம் திகதியைத் தாண்டியும் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவில்லை.

23 மாவட்டங்களில் இன்னும் இரவு ஊரடங்கு உத்தரவு உள்ளது. இரண்டு மாவட்டங்களில் முழுநாள் ஊரடங்கு உத்தரவு இன்னும் நடைமுறையில் உள்ளது. பொதுவாக தேர்தல் தயாரிப்புப் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகள் 16 -18 மணி நேரம் கடமையில் இருப்பார்கள், இப்போது 10 அல்லது 12 க்கு மேல் செய்ய முடியாது என்று தேர்தல் ஆணைக்குழுவின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் சமர்ப்பணம் செய்தார்.

இதேவேளை, தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, மார்ச் 17ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை பொது விடுமுறையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் அன்றைய தினங்களில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் செல்லுபடியற்றவை என்று சமர்ப்பணம் செய்தார்.

# வெல்லாய விபத்தில் லொறிச் சாரதி பலி

## உதவியாளர் படுகாயம்

பண்டாரவளையிலிந்து அக்கரைப்பற்று நோக்கி மரக்கறிகளை ஏற்றி வந்த லொறியொன்று வெல்லவாய பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதில் லொறியின் சாரதி அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து நேற்று நண்பகல் இடம்பெற்றது.

மேலும் லொறியின் உதவியாளர் படுகாயமடைந்த நிலையில், பதுளை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளர்.

விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# கழிவுப்பொருள் மூலம் மோட்டார் வாகனம் வடிவமைத்துள்ளார் கிளிநொச்சி இளைஞன்



கிளிநொச்சி, மே. 20

கழிவு பொருட்களைக் கொண்டு மோட்டார் வாகனம் ஒன்றை வடிவமைத்துள்ள கிளிநொச்சி இளைஞனின் முயற்சி தொடர்பில் பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரந்தன் பகுதியில் வாழும் இந்த இளைஞனின் நீண்ட நாள் முயற்சி அண்மையில் கணிசமான அளவு பூரணமடைந்துள்ளது. இந்த மோட்டார் வாகனத்தை செலுத்தக் கூடிய வகையில் தற்போது முன்னேற்றம் கண்டுள்ளார் அந்த இளைஞன்.

கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த சூழலைச் சாதகமாக பயன்படுத்தி, தனது திறமை, நீண்ட கால முயற்சி, சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் முழு மூச்சாக உழைத்து இன்று கழிவுப் பொருள்களைக்கொண்டு மோட்டார் வாகனம் ஒன்றை வடிவமைத்துள்ள இளைஞனே இவர்.

இளைஞனின் இந்த வடிவமைப்புக்கு குடும்ப பொருளாதாரம் பாரிய தடையாக இருந்துள்ளது. எனினும் நீண்ட கால முயற்சியின் வெளிப்பாடாக இன்று இவ்வாறு மோட்டார் வாகனம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பழுதடைந்த மோட்டார் சைக்கிள் எஞ்சினை திருத்தி அதனை அந்த வாகனத்திற்குப் பயன்படுத்தியதுடன், கழிவாக வீசப்பட்டிருந்த வாகனப் பொருள்களையும் பயன்படுத்தியே அந்த மோட்டார் வாகனத்தை வடிவமைத்துள்ளார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்ற அருள்தாஸ் றொசான் என்ற 20 வயதுடைய இளைஞன் சிறுவயதிலிருந்தே இவ்வாறான வடிவமைப்பு தொடர்பில் ஆர்வம் செலுத்தி வந்துள்ளார் என அவரது தாயார் தெரிவிக்கின்றார்.

குடும்பப் பொருளாதாரம் பின்னிலையில் இருந்தபோதிலும், மகனின் முயற்சியைத் தட்டிக்கொடுத்தார் என்றும் அவர் தெரிவிக்கின்றார். அதன் விளைவாகக் கிடைத்த இந்த வெற்றி தனக்கு மகிழ்வைத் தருவதாகத் தெரிவிக்கும் தாயார், தான் பெருமை அடைவதாகவும் குறிப்பிடுகின்றார்.

குடும்ப பொருளாதாரம் இவரது முயற்சிக்கு நீண்ட கால தடையாக இருந்தபோதிலும், தாயாரின் ஒத்துழைப்பும், தட்டிக்கொடுத்தலும் இளைஞனின் இந்த வடிவமைப்புக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது. உயர்தர கல்வியை நிறைவு செய்ய இந்த இளைஞன் தொழில் பயிற்சி நிறுவனத்தில் கல்வி கற்று வருகின்றார்.

இந்த வடிவமைப்பின்போது பொருளாதாரம் சார்ந்த பலதடைகள் தனக்கு ஏற்பட்டதாகவும், வைத்தியசாலையில் நோயாளர்களை பராமரிப்பதன் ஊடாகக் கிடைக்கும் வருமானத்திலிருந்து குடும்பச் செலவையும் பார்த்து எனக்கு சிறு சிறு தொகையைத் தாயார் வழங்கியதன் ஊடாகவே இன்று இவ்வாறான முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகவும் அந்த இளைஞன் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான வடிவமைப்பு எமது நாட்டுக்கு ஏற்ற



வகையில் உள்ளதாகவும், இதனை மாதிரியாக வைத்து வேறு வாகனங்களையும் வடிவமைக்க முடியும் எனவும் இந்த இளைஞன் நம்பிக்கை வெளியிடுகின்றார்.

மிக குறைந்த செலவில் முச்சக்கர வண்டிக்கும் குறைவான தொகையில் இவ்வாறான வடிவமைப்பை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

தனது நண்பர்கள் பலரை ஏற்றியவாறு பயணித்தபோது 60 கிலோ மீற்றர் வேகத்தில் இந்த வாகனம் பயணிப்பதாகவும் தெரிவிக்கும் இளைஞன். 500 கிலோ எடை வரை வாகனத்தில் ஏற்ற முடியும் எனவும் கூறினார்.

இதனை போன்று வடிவமைப்புக்களை தன்னால் மேற்கொள்ள முடியும் எனவும், அதற்கு உற்பத்தி நிறுவனங்கள் உதவினால் குறைந்த செலவில் இவ்வாறான உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் எனவும் அந்த இளைஞன் நம்பிக்கை வெளியிடுகின்றார்.

இளைஞனின் இந்த முயற்சி தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலாளர் தங்கவேலாயுதம் பிருந்தாகரன் நேரில் சென்று பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2020 இல் வெளியிடப்பெற்றது.